**செ.வெ. எண்: 448** **நாள்: 14.07.2011**

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (14.7.2011) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு செங்கல் உற்பத்தியாளர்கள் சங்க கூட்டமைப்பின் மாநில தலைவர் திரு கே. ரத்தினசேகர் அவர்கள் சங்க பிரதிநிதிகளுடன் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, பொது மக்களுக்கு சிரமமின்றி சரியான விலையில் செங்கல் கிடைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சி காலத்தில் (2001–2006) வருடாந்திர கட்டண முறை கொண்டுவரப் பட்டது என்றும், அதே போன்று தற்போது ஒவ்வொரு ஆண்டும் கட்டணம் கட்டும் முறையை மாற்றி மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மொத்தமாக கட்டணம் செலுத்திட ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்கள்.

தமிழ்நாடு செங்கல் உற்பத்தியாளர்கள் சங்க கூட்டமைப்பின் கோரிக்கைகளைக் கனிவுடன் கேட்டறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கட்டுமானப் பொருள்களின் விலை அதிகமாக உள்ள நிலையில் செங்கல் விலை உயர்வு ஏழை, எளிய, நடுத்தர மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது என்றும், அதனால் பொது மக்களின் நலன் கருதி செங்கல் விலையினை குறைக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க செங்கல் விலையை தற்போதைய விலையிலிருந்து உடனடியாக லோடு ஒன்றுக்கு 3000 ரூபாய் அளவிற்கு குறைத்து கட்டுமானத் தொழில் வளர்ச்சிக்கும், அரசுக்கும் உறுதுணையாக இருப்பதாக தமிழ்நாடு செங்கல் உற்பத்தியாளர்கள் சங்க கூட்டமைப்பினர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் உறுதியளித்தார்கள்.

இந்தச் சந்திப்பின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தமிழ்நாடு செங்கல் உற்பத்தியாளர்கள் சங்க கூட்டமைப்பின் மாநிலப் பொருளாளர் திரு எம். சின்னசாமி, மாநிலத் துணைச் செயலாளர் திரு எஸ்.பி. ஜெயராஜ், மாநிலத் துணைத் துலைவர் திரு கே.பி.மோகனசுந்தரம், ஆலோசகர் திரு வீரபாண்டி விஜயன், மாநில உதவித் தலைவர் திரு தசரதன் மற்றும் கோவை மாவட்ட செங்கல் உற்பத்தியாளர் சங்க செயலாளர் திரு P. தர்மராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 14.7.2011